# கோயம்புத்துார் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்துார் மாநகராட்சி,
கோயம்புத்துார்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்துார் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்துார் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்துார், பேரூர் மற்றும்
சிங்காநல்லுார் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

<u>ந.க.எண் : **1897 / 2007 /** எம்சி. **8** நாள் **28.3.2007**</u>

<u>அய்யா /அம்மா,</u>

பொருள் : கோயம்புத்துார் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஏப்ரல் 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.

----------

கோயம்புத்துார் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 30.3.2007 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா உறால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

மன்றச் செயலர்
கோயம்புத்துார் மாநகராட்சி

நகல் :
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துார் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துார் மாநகராட்சி

## 30-3-2007-ம் தேதி மாமன்ற அவசரக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள், |
| 1. | கிழக்கு மண்டலம் - 2007-2008ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உச்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2. | தெற்கு மண்டலம் - 2007-2008ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உச்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | கிழக்கு மண்டலம் - வார்டு எண்7 போயர் வீதி மேற்கு – காலியாக உள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் - தொல்லியல் துறை அலுவலகத்திற்கு மாத வாடகை அடிப்டையில் ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் |
| 4 | கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் மாநகராட்சி வணக வளாகம் கடை எண்.5 – உரிமக் காலம் நீட்டிப்பு செய்து உரிமக் கட்டணம் உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 5 | வடக்கு மண்டலம் - 2007-2008ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உச்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | மேற்கு மண்டலம் - 2007-2008ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உச்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7. | தெற்கு மண்டலம் - 2007-2008ம் ஆண்டிற்கான குத்தகை இனம் - கழிவு நீர் பண்ணையில் புல் அறுத்துக் கொள்ளும் உரிமம் - மூன்று மாதங்களுக்கு நிபந்தனைகளுடன் அனுமதித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8. | பொறியியல் பிரிவு - பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம் - JNNURM – திட்டத்தின் கீழ் செயல் படுத்துதல் - மான்யம் மற்றும் கடன் பெறுதல் - தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு – மாநகராட்சியின் ஒப்புதல் வழங்குதல் -தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - பில்லூர் குடிநீர்த் திட்டம் II – மற்றும் விநியோகக்குழாய் புனரமைப்புச் செய்தல் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | வடக்கு மண்டலம் - சக்தி ரோடு ஆம்னி பேருந்து நிலைய பதிவு அறைகள் - உச்ச ஏலத் தொகை நிாணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - 20 அபிவிருத்திப் பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | நகரமைப்பு பிரிவு - கழிவு நீர் உந்து நிலையம் விரிவு படுத்துதல் 0.18 ஏக்கர் நிலம் வருவாய் துறையிடமிருந்து நில உரிமை மாற்றம் செய்தல் மற்றும் 8.11 ஏக்கர் நிலம் நில ஆர்ஜிதம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | நகரமைப்பு பிரிவு - கழிவு நீர் உந்து நிலையம் அமைத்தல் - சிங்காநல்லூர் க.ச.எண்.541/1 முதலியன – 15.12 ஏக்கர் நிலம் நில ஆர்ஜிதம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| | நன்றியுரை. |

## திருக்குறள்

**வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**

**யானையால் யானையாத் தற்று.**

**(குறள் - 678)**

## விளக்கம்

**ஒரு செயலில் ஈடுபடும் போது, அச்செயலின் தொடர்பாக மற்றொரு செயலையும் முடித்துக் கொள்வது ஒரு யானையைப் பயன்படுத்தி மற்றொரு யானையைப்பிடிப்பது போன்றதாகும்**

**- திருவள்ளுவர்.**

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

இந்திய துணைக்கண்டத்தில் திராவிட இயக்கத் தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள், பல்வேறு பேராட்டங்கள் நடத்தி தியாகம் செய்து பெற்றுதந்த இடஒதுக்கீடு கொள்கைக்கு, தற்போது ஏற்பட்டுள்ள சோதனைக்கு இம்மாமன்றம் தனது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்கிறது. 100 ஆண்டுகாலம் வஞ்சிக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள இட ஒதுக்கீடு கொள்கைக்கு எதிர்ப்பான நிலையை முறியடித்து, உரிய நடவடிக்கை எடுத்து மத்திய மாநில அரசுகள் தாழ்த்தப்பட்ட-பிற்பட்ட மக்களை பாதுகாத்திட வேண்டும் என மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றலாம்.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 294 நாள்.30.03.2007</u>**

**இந்திய துணைக்கண்டத்தில் திராவிட இயக்கத் தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள், பல்வேறு பேராட்டங்கள் நடத்தி தியாகம் செய்து பெற்றுதந்த இடஒதுக்கீடு கொள்கைக்கு, தற்போது ஏற்பட்டுள்ள சோதனைக்கு இம்மாமன்றம் தனது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்கிறது. 100 ஆண்டுகாலம் வஞ்சிக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள இட ஒதுக்கீடு கொள்கைக்கு எதிர்ப்பான நிலையை முறியடித்து, உரிய நடவடிக்கை எடுத்து மத்திய மாநில அரசுகள் தாழ்த்தப்பட்ட-பிற்பட்ட மக்களை பாதுகாத்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

---

தமிழக சட்டமன்ற வரலாற்றில் 1957 முதல் 2007 வரையிலான 50 ஆண்டுகாலம் தோல்வியின்றி தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகவும் 5 முறை தமிழக முதல்வராகவும் பொறுப்பேற்று அயராது அரும்பணியாற்றி வரும் தமிழக முதல்வர் முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு கலைஞர் அவர்களை கோவை மாநகராட்சி மன்றம் பாராட்டுகின்றது. தமிழகம் மட்டுமின்றி இந்தியத் துணைக்கண்டம் அளவில் உறவுக்கு கைகொடுப்போம் குரல் கொடுப்போம் என்கின்ற தாரக மந்திரத்தை முன்வைத்து மாநில அரசுகளின் தன்னாட்சி உரிமையையும் மக்களாட்சியின் மாண்புகளையும் நிலை நாட்டி மாநில அரகளுக்கு சுயநிர்ணய அதிகாரங்களையும் பெற்றுத் தந்திருக்கின்றார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்ளின் பணி மேலும் தொடர்ந்திட அவர் இன்னும் பல்லாண்டு வாழ நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத்தெரிவித்து இம்மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றலாம்.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 295 நாள்.30.03.2007</u>**

**தமிழக சட்டமன்ற வரலாற்றில் 1957 முதல் 2007 வரையிலான 50 ஆண்டுகாலம் தோல்வியின்றி தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகவும் 5 முறை தமிழக முதல்வராகவும் பொறுப்பேற்று அயராது அரும்பணியாற்றி வரும் தமிழக முதல்வர் முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு கலைஞர் அவர்களை கோவை மாநகராட்சி மன்றம் பாராட்டுகின்றது. தமிழகம் மட்டுமின்றி இந்தியத் துணைக்கண்டம் அளவில் உறவுக்கு கைகொடுப்போம் குரல் கொடுப்போம் என்கின்ற தாரக மந்திரத்தை முன்வைத்து மாநில அரசுகளின் தன்னாட்சி உரிமையையும் மக்களாட்சியின் மாண்புகளையும் நிலை நாட்டி மாநில அரகளுக்கு சுயநிர்ணய அதிகாரங்களையும் பெற்றுத் தந்திருக்கின்றார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பணி மேலும் தொடர்ந்திட அவர் இன்னும் பல்லாண்டு வாழ நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத்தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

---

கோவை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக்கப்படும் அமர்வுப்படி மிகவும் குறைவாக உள்ளதால், வழங்கபடும் அமர்வுப்படியினை உயர்த்தி மாற்றி, மாதம் ரூ.5000/- வீதம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றம் நிறைவேற்றலாம்.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 296 நாள்.30.03.2007</u>**

**கோவை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக்கப்படும் அமர்வுப்ப்டி குறைவாக உளளதால், வழங்கபடும் அமர்வுப்படியினை உயர்த்தி மாற்றி, மாதம் ரூ.5000,- வீதம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

---

மாமன்ற உறுப்பினர்கள் வார்டு சம்பந்தப்பபட்ட அன்றாடப்பணிகளை கவனிக்க வார்டிலும் மாமன்ற உறுப்பினர்களுக்கென ஒரு அலுவலகம் கட்ட அனுமதி வேண்டி அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றலாம்.

**மாநகர மன்ற தீர்மானம் எண். 297 நாள்.30.03.2007**

**மாமன்ற உறுப்பினர்கள் வார்டு சம்பந்தப்பபட்ட அன்றாடப்பணிகளை கவனிக்க வார்டிலும் மாமன்ற உறுப்பினர்களுக்கென ஒரு அலுவலகம் கட்ட அனுமதி வேண்டி அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்1** குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - 2007-2008-ம் ஆண்டு ஆண்டிற்கான குத்தகை இனங்கள் – பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது–உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2007-2008ம் ஆண்டிற்கான கீழ்க்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு 01.04.07 முதல் 31.03.08 வரையிலான காலத்திற்கு ஏல இனங்களில் பெறப்படும் வருவாயை வசூலித்துக்கொள்வதற்கான உரிமைக்கு22.2.2007, 2.3.2007, 14.3.2007, 22.3.2007 மற்றும் 24.03.2007 ஆகிய தேதிகளில் பொது ஏலம் / மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.
ஏல இனங்கள்

1. சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
2. சிங்காநல்லூர் ஆடு அறுவை மனை (8 கடைகளுடன் கூடியது) கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3. உப்பிலிபாளையம் ஆடு அறுவை மனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
4. சௌளிபாளையம் ஆடு அறுவை மனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
5. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
6. இராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
7. புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
8. பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
9. ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
10. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
11. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் வாகன நிறுத்துமிடத்தில் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
12. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளும் உரிமம்.
13. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் எடை காட்டும் இயந்திரங்கள் மூன்று எண்ணிக்கை அமைத்து நடத்திக்கொள்ளும் உரிமம்
(மூன்றாண்டுகளுக்கு)

மேற்படி இனங்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ளளாறு அதிகபட்சமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை | மூன்றாண்டு சராசரித்தொகை | நடப்பாண்டு ஏலத்தொகை | உயர்ந்தபட்ச கேள்விதாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட் | 1,26,100 | 1,42,867 | 3,30,011 (ஒப்பந்தப்புள்ளி) | திரு.எஸ். பழனிசாமி |
| 2 | சிங்காநல்லூர் ஆடு அறுவை மனை | 50,000 | 43,384 | 66,511 (ஒப்பந்தப்புள்ளி) | திரு.எம். ரகுராம் |
| 3 | உப்பிலிபாளையம் ஆடு அறுவை மனை | 60,517 | 53,989 | 95,000 | திரு. முனுசாமி |
| 4 | சௌளிபாளையம் ஆடு அறுவை மனை | 28,000 | 23,784 | 66,601 (ஒப்பந்தப்புள்ளி) | திரு.எம். ரகுராம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் | 1,42,000 | 1,69,000 | 2,35,500 | திரு.கே.எம். முருகன் |
| 6 | இராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | 1,76,000 | 1,89,434 | 2,05,099 (ஒப்பந்தப்புள்ளி) | திரு.பி. சுப்ரமணியம் |
| 7 | புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | 1,57,000 | 1,72,500 | 2,50,200 | திரு.கே.எம். முருகன் |
| 8 | பா.நா.பாளையம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | 1,02,100 | 98,733 | 2,00,100 | திரு.கே.எம். முருகன் |
| 9 | ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | 14,000 | 11,700 | 41,000 | திரு.கே. ராம்குமார் |
| 10 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்தல் | 7,71,003 | 7,13,335 | 9,48,000 | திரு.சி. செல்வம் |
| 11 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | 1,01,071 | 76,224 | 2,14,000 | திரு. வேலுமணி |
| 12 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளும் உரிமம். | 6,000(p.m) | 6,267(p.m) | 1,950(p.m) | திரு. நித்தியானந்தம் |
| 13 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் எடை காட்டும் இயந்திரங்கள் அமைத்து நடத்தும் உரிமம் | 21,600 (மூன்றாண்டுக்கு) | 21,600 (மூன்றாண்டுக்கு) | 10,500 (மூன்றாண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி) | திரு.கே.எம். புகழேந்தி |

மேற்காண் இனங்களில் வரிசை எண்.1 முதல் 11 வரையிலான குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித்தொகையைவிட அதிகமாக உள்ளதால், மேற்படி ஏல இனங்களை உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யலாம்.

வரிசை எண்.12ல் குறிப்பிட்டுள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளும் உரிமைக்கு கோரப்பட்டுள்ள குறைந்தபட்ச மாதாந்திர கேள்வித்தொகை, சென்ற ஆண்டு குறைந்தபட்ச பராமரிப்புத்தொகையையும் ஒப்பிடும்போது குறைவாக உள்ளதால் குறைந்தபட்ச கேள்வித்தொகையினை ஏற்று ஒப்படை செய்யலாம்

வரிசை எண்.13ல் குறிப்பிட்டுள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் மூன்று எடை காட்டும் இயந்திரங்கள் அமைத்து நடத்திக்கொள்ளும் உரிமைக்கு அதிகபட்சமாக திரு.கே.எம்.புகழேந்தி என்பவரால் மூன்றாண்டுகளுக்கு ரூ.10,500/- ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளது. இது சென்ற மூன்றாண்டு ஏலம் மற்றும் சராசரித்தொகையைவிட ரூ.11,100/- குறைவாக உள்ளது. ஐந்து முறை ஏலத்திற்கு கொண்டு வந்தும் இவ்வினத்திற்கு பெரும்பான்மையான ஏலதாரர்கள் பங்கு கொள்ளவில்லை. மேலும் இத்தொகைக்கு மேல் ஏலம் கோரவோ அல்லது ஒப்பந்தப்புள்ளி அளிக்கவோ எவரும் முன்வரவில்லை. எனவே காலதாமதத்தை தவிர்க்கவும் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று ஒப்படை செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது. அவசர அவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு.**

1. வரிசை எண் 1முதல் 12 வரை உள்ள குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள கேள்வித்தொகையினை ஏற்று ஒப்படை செய்யலாம்.
2. வரிசை எண் 13க்கு கோரப்பட்டுள்ள கேள்வித்தொகையினை ஏற்று ஒப்படை செய்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்

**எண்.13647/2006/கிகிஅ.7**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 298 நாள்.30.03.2007**

(1) **அலுவலகக்குறிப்பினை ஏற்று வரிசை எண். 1 முதல் 12 வரையுள்ள குத்தகை இனங்களுக்கு கோரப்பட்டுள்ள கேள்வித்தொகையினை ஏற்று ஒப்படை செய்ய அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண். 13க்கு கோரப்பட்டுள்ள கேள்வித்தொகையினை ஏற்று ஒப்படை செய்ய அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்: 2

மாமன்றத் தீர்மான எண்.280 நாள் 02.02.2007ல் அனுமதி அளித்துள்ளபடி கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட 1 முதல் 56 வரையிலான குத்தகை இனங்களுக்கு 2007–2008ம் ஆண்டுக்கு பொது ஏலம் ம்ற்றும் ஒப்பந்தப்புள்ளிளிள் 20.03.07,13.02.2007, 7.03.2007, 13.03.2007, 21.03.2007 மற்றும் 26.03.2007 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. இதில் கீழ்குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு கீழ்கண்டுள்ளவாறு உச்சக்கேள்வித்தொகை கோரப்பட்டுள்ளது.

IV. கடந்த ஆண்டு மற்றும் 3 ஆண்டு சராசரியைவிட கூடுதலாக சென்ற இனங்கள்

| வ. எண் | ஏல இன எண் | ஏல இனம் | ஏலதாரர் குத்தகைதாரர் பெயர் | உயர்ந்தபட்ச அ.ஏலத்தொகை/ ஆ.ஒப்பந்தப்புள்ளி | கூடுதல் குறைவு விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | தியாகி குமரன் மார்க்கெட் தரை கடை வசூல் | திரு.உதயகுமார்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 9,50,501/–<br>8,90,501/–<br>8,25,067/–<br>60,000/– | + 7% |
| 2 | 2 | இராமர் கோவில் வீதி மார்க்கெட் தரை கடை வசூல் | திரு.சி.எம்.எம்.முபாரக்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 14,44,444/–<br>11,65,750/–<br>11,16,583/–<br>2,78,694/– | + 24% |
| 3 | 4 | போத்தனூர் லாரிப்பேட்டையில் வாகன வசூல் | கோயம்புத்தூர் சிட்டி லாரி புக்கிங் ஏஜெண்ட்ஸ் அசோசியேசன்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | ஆ) 10,09,000/–<br>7,90,000/–<br>6,39,167/–<br>2,19,000/– | + 28% |
| 4 | 5 | தியாகி குமரன் மார்க்கெட் உட்புறம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன வசூல் | திருமதி.ஆர்.மீனாள்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | ஆ) 12,06,000/–<br>10,50,000/–<br>8,88,727/–<br>1,56,000/– | + 15% |
| 5 | 6 | உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் | திரு.எம்.ஏ.சபேர் அலி<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | ஆ) 10,10,010/–<br>9,46,000/–<br>9,48,161/–<br>64,010/– | + 7% |
| 6 | 7 | காந்திபுரம் நகர.பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் | திரு.எஸ்.கார்த்திகேயன்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 5,25,000/–<br>4,51,000/–<br>4,31,000/–<br>74,001/– | + 16% |
| 7 | 9 | காந்திபுபும் மத்திய பேருந்து நிலையத்தில் தரைதள கேரேஜ் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் வசூல் | திருமதி.ஆர்.மீனாள்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 13,10,090/–<br>11,00,003/–<br>9,39,335/–<br>2 ,10,087/– | + 19% |
| 8 | 10 | காந்திபுரம் நகர.பேருந்து நிலையம் இரு சக்கர வாகன வசூல் | திரு.ஏ.சி.ராஜ்குமார்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 7,00,500/–<br>6,12,000/–<br>5,39,333/–<br>88,500/– | + 14% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 12 | மத்திய பேருந்து நிலையம் இரவு மட்டும் தங்கும் விடுதி, மற்றும் பொருள் காப்பகம் | திரு.ஆர்.சங்கர் பிரகாஷ்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (அ) 8,75,000/–<br>7,45,000/–<br>6,96,667/–<br>1,30,000/– | +17% |
| 10 | 13 | வ.உ.சி.பூங்கா மிருகக்காட்சி சாலை மற்றும் சிறுவர் விளையாடும் இடம் கட்ட.ணம் வசூல் | திரு.கே.மணிகண்டன்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 33,30,000/–<br>23,75,000/–<br>19,09,000/–<br>9,55,000/– | +41% |
| 11 | 14 | வ.உ.சி.பூங்கா சிறுவர் ரயில் கட்ட.ணம் வசூல் | திரு.வி.சுப்ரமணி<br>8சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 3,70,008/–<br>3,53,999/–<br>2,82,636/–<br>16,009/– | +5% |
| 12 | 15 | தியாகி குமரன் மார்க்கெட் மத்தியில் தென்வடல் இரு சக்கர வாகன வசூல் | திரு.எம்.அப்பாஸ்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 4,51,000/–<br>4,00,100/–<br>3,45,367/–<br>51,000/– | + 16% |
| 13 | 17 | நவீனப் பொதுக்கழிப்பிடம், தியாகி குமரன் மார்க்கெட் | திரு.எஸ்.மூர்த்தி<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 4,47,777/–<br>4,06,000/–<br>3,71,583/–<br>41,777/– | + 10% |
| 14 | 18 | நவீனப் பொதுக்கழிப்பிடம், லிங்கப்ப செட்டி வீதி | திரு.ஆர்..ராஜேந்திரன்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (அ) 2,98,000/–<br>2,16,500/–<br>1,88,167/–<br>81,500/– | +38% |
| 15 | 19 | நவீனப் பொதுக்கழிப்பிடம், உக்கடம் மீன் மார்க்கெட் | திரு.வி.கே..ரஹமத்துல்லா<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 2,50,000/–<br>1,76,050/–<br>2,42,083/–<br>73,950/– | +70% |
| 16 | 22 | நவீனப் பொதுக்கழிப்பிடம், போத்தனூர் ரோடு லாரிப்பேட்டை | திரு.பி.முகமதுமுஸ்தபா<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 38,000/–<br>36,100/–<br>35,550/–<br>1,900/– | +5% |
| 17 | 23 | நவீனப் பொதுக்கழிப்பிடம், ஆர்.வி.ஹோட்டல் எதிர்புறம் | திரு.ராஜா<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 8,02,008/–<br>7,20,000/–<br>6,43,533/–<br>82,008/– | + 11% |
| 18 | 25 | நவீனப் பொதுக்கழிப்பிடம், வ.உ.சி.பூங்கா | திரு.ஜி.சுப்ரமணி<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ)<br>2,20,000/–<br>1,93,599/–<br>1,48,050/–<br>26,401/– | + 16% |
| 19 | 26 | நவீனப் பொதுக்கழிப்பிடம், உப்பிலிபாளையம் | .திரு.டி.ரகுபதி<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 1,80,000/–<br>1,71,000/–<br>1,67,367/–<br>9,000/– | + 5% |
| 20 | 27 | நவீனப் பொதுக்கழிப்பிடம், டவுன்ஹால் அருகில் | திரு.எல்.என்.செய்து இப்ராகிம்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 12,58,001/–<br>9,39,900/–<br>8,71,800/–<br>3,18,101/– | +34% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | 30 | தெற்கு மண்டல.த்திற்கு உட்பட்ட 48 புளிய மரங்களின் பயன்களை அனுபவி.த்துக்கொள்ளுதல் | திரு.வி.கிருஷ்ணமூர்த்தி<br><br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (அ 2,250/–<br>2,100/–<br>2,097/–<br>150/– | + 7% |
| 22 | 33 | கழிவு நீர்ப்பல்லணையில் உள்ள 154 தென்னை மரங்களின் பயனை அனுபவித்துக்கொள்ளுதல் | திரு.காஜா மொய்தீன்<br><br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (அ) 7,500/–<br>5,500/–<br>4,933/–<br>2,000/– | +36% |
| 23 | 34 | தெற்கு மண்டல.த்திற்கு உட்பட்ட 32 தென்னை மரங்களின் பயனை அனுபவித்துக்கொள்ளுதல் | திரு.ஆர்.செல்வராஜ்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 1,200/–<br>800/–<br>675/–<br>400/– | +50% |
| 24 | 36 | குரு ஹோட்டல் அருகில் கார் நிறுத்துமிடம் | திரு..மயில்சாமி(லார்ட்ஸ் பார்க்)<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 9,00,000/–<br>3,30,000/–<br>2,58,333/–<br>5,70,000/– | +173% |
| 25 | 37 | நவீனப் பொதுக்கழிப்பிடம், பி3 காவல் நிலையம் அருகில் | திரு.முனியாண்டி<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்ற ஆண்டை விட கூடுதல் | (ஆ) 13,73,000/–<br>11,52,036/–<br>10,38,812/–<br>2,20,964/– | + 19% |

V. கடந்த ஆண்டைவிட குறைவாகவும் 3 ஆண்டு சராசரியை விட கூடுதலாகவும் சென்ற இனங்கள்

| வ. எண் | ஏல இன எண் | ஏல இனம் | ஏலதாரர் குத்தகைதாரர் பெயர் | உயர்ந்தபட்ச அ.ஏலத்தொகை / ஆ.ஒப்பந்தப்புள்ளி | கூடுதல் குறைவு விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 26 | 3 | லாரிப்பேட்டை மொத்த வியாபார மீன் மார்க்கெட் | திரு.ஜமால்தீன்<br><br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (அ) 2,55,000/–<br>3,00,000/–<br>2,50,000/–<br>45,000/– | –15% |
| 27 | 11 | இராஜ வீதி மருந்தக வளாகத்தில் இரு மற்றும் நான்கு சக்கர வாகன வசூல் | திரு.வி.ஜெகதீசன்<br><br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (ஆ) 7,30,000/–<br>8,01,999/–<br>6,98,358/–<br>71,999/– | –11% |
| 28 | 16 | ஆடு அறுவை மனை, உக்கடம் | திரு.என்.சின்னதம்பி<br><br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (அ)<br>2,03,000/–<br>2,40,500/–<br>1,76,033/–<br>37,500/– | –16% |
| 29 | 24 | நவீனப் பொதுக்கழிப்பிடம், மத்திய பேருந்து நிலையம் தளம் –1,2,3,4 | திரு. சி.செல்வம்<br><br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | அ) 14,55,000/–<br>17,33,750/–<br>13,98,416/–<br>2,78,750/– | –17% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31 | 29 | நவீனப் பொது கழிப்பிடம், தர்மராஜா கோவில் வீதி | கண்மணி மகளிர் சுய உதவிக்குழு<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (ஆ) 33,000/–<br>35,000/–<br>32,717/–<br>2,000/– | – 6% |
| 32 | 35 | பொருள் காப்பகம் – உக்கடம் பேருந்து நிலையம் | திரு.ஏ.சர்புதீன்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (ஆ) 90,000/–<br>92,590/–<br>85,030/–<br>2,590/– | – 3% |

VI. கடந்த ஆண்டை விட குறைவாகவும், 3 ஆண்டு சராசரியை விட குறைவாகவும் சென்ற இனங்கள்

| வ. எண் | ஏல இன எண் | ஏல இனம் | ஏலதாரர் குத்தகைதாரர் பெயர் | உயர்ந்தபட்ச அ.ஏலத்தொகை/ ஆ.ஒப்பந்தப்புள்ளி | கூடுதல் குறைவு விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 33 | 8 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் | திரு.பி.வி.சுப்பிரமணியம்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (ஆ)<br>20,24,000/–<br>23,07,000/–<br>22,22,267/–<br>2,83,000/– | –12% |
| 34 | 21 | நவீனப் பொது கழிப்பிடம், உக்கடம் பேருந்து நிலையம் | திரு.பி.அப்துல் கபூர்<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (ஆ)<br>6,61,000/–<br>8,75,900/–<br>8,91,033/–<br>(–)<br>2,14,900/– | –24% |
| 35 | 28 | நவீனப் பொது கழிப்பிடம், செட்டி வீதி | திரு.வி.கிருஷ்ணமூர்த்தி<br>சென்றஆண்டு ஏலத்தொகை<br>மூன்றாண்டு சராசரி தொகை<br>சென்றஆண்டை விட குறைவு | (அ)<br>1,85,000/–<br>2,55,100/–<br>2,26,535/–<br>70,100/– | –27% |

மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண்.1 முதல் 26 வரையிலான இனங்கள் சென்றஆண்டு ஏலத்தொகையைக்காட்டிலும் கூடுதலாக சென்றுள்ளதால் இவற்றின் உச்ச கேள்வித்தொகைகளை ஏற்கலாம். மேலும் வரிசை எண் 27 முதல் 32 வரையிலான இனங்கள் சென்றாண்டு ஏலத்தொகையைக்காட்டிலும் குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் சென்று உள்ளதால் இவ்வினங்களின் உச்ச கேள்வித்தொகைகளையும். மற்றும் வரிசை எண் 33 முதல் 35 வரையிலான இனங்கள் சென்றாண்டு ஏலத்தொகையைக்காட்டிலும் குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட குறைவாகவும் சென்று உள்ளதால் இவ்வினங்களின் உச்ச கேள்வித்தொகைகளையும் மன்றத்தின் அனுமதி பெற்று ஏற்பதற்கும். பொருள் சமா்ப்பிக்கப்பட்டது.

மேற்படி 2007-2008ம் ஆண்டு குத்தகை இனங்களில் இனம் எண்.20, நவீன பொதுக்கழிப்பிடம் மரக்கார நஞ்சப்பா வீதி கழிப்பிடத்தை இடிக்கப்பட உள்ளதால் இதனை இந்தாண்டு குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்யலாம்.

அவசர அவசியத்தைக் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவா், கணக்கு குழு தலைவா் அவா்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு– அனுமதிக்கலாம்** **ந.க.எண்.12467/06/அ10**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 299 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண் 3** குத்தகை-கோவை மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-வார்டு எண்.7 போயர் வீதி மேற்கு – மாநகராட்சி ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் - காலியாக உள்ளது-தொல்லியல் துறை அலுவலகத்திற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல்-தொடர்பாக.

-------

கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 7வது வார்டு போயர் வீதி மேற்கு பகுதியில் உள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் 1600 சதுரடி அளவுள்ள 37 ஆண்டுகளான மங்களுர் ஒட்டுவில்லைக்கட்டிடம் காலியாக உள்ளது.

தொல்லியல் துறை அலுவலர் தமது 27.10.2006ம் தேதிய கடிதத்தில் மேறபடி காலியாக உள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளிக்கட்டிடம் சிங்காநல்லுா மையப்பகுதியில் இருப்பதனால் தொல்லியல் துறை அகழ் வைப்பகத்தினை பார்வையிட வரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் பார்வையிடும் வகையிலும், அலுவலக நிர்வாக பணிகளுக்கும் ஏற்ற இடமாக உள்ளதால், இக்கட்டிடத்தினை தொல்லியல் துறை அகழ் வைப்பகத்திற்கு எடுத்துக்கொள்ளவும், பொதுப்பணித்துறையினர், மூலமாக நிர்ணயிக்கும் மாத வாடகை செலுத்துவதற்கும் முழு சம்மதம் எனவும் தெரிவித்துள்ளார்.

பொதுப்பணித்துறை அலுவலர் தமது ந.க.எண்.632006 நாள் 5.2.2007-ம் தேதிய கடிதத்தின் வாயிலாக மேற்காண் பொதுப்பணித்துறை கணக்கீட்டின் படி நிர்ணயம் செய்யப்பட வாடகைத்தொகை ரூ.5,270/- என்ற அடிப்படையில் ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு தொல்லியல் துறை அலுவலகத்திற்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. அவசர அவசியத்தைக்கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு–அனுமதிக்கலாம்** **(எண்.13560/06/கி.அ7)**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 300 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண்: 4** உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம்- கோவை மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-கடைஎண் 5-ன் உரிமக்காலம் 31.3.2007 உடன் முடிவடைய உள்ளது. உரிமக்காலம் சீட்டிப்பு செய்து-உரிமக்கட்டணம் உயர்வு செய்தல்-தொடர்பாக.

மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடைஎண் 5 உரிமக்கட்டணம் ரூ.1,200/- அடிப்படையில் திரு.அய்யாசாமி என்பவருக்கு மாமன்றத் தீர்மான எண் 56 நாள் 30.6.2004ன்படி, நீட்டிப்பு செய்யப்பட்ட கடையின் உரிமக்காலம் 31.3.2007 உடன் முடிவடையவுள்ளது.

மேற்படி கடை எண்.5ன் குத்தகைதாரர் தமது 31.1.2007-ம் தேதியிட்ட விண்ணப்பத்தில் கடையின் உரிமக்காலம் 31.3.2007 உடன் முடிவடைய உள்ளதால், மெலும் மூன்றாண்டுகளுக்கு கடையின் உரிம காலத்தை நீட்டிப்பு செய்யுமாறும் மாநகராட்சி உயர்வு செய்யும் உரிமக்கட்டணத் தொகை மார்ச் 2007 வரை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமாக கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மூன்றாண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடாமல் குத்தகை நீடித்தல் குறித்து அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. (அரசாணை (இருபதாண்டுகள்) எண்.147 நாள் 30.12.2000) இதில் பத்தி எண்.4(3)ல் அவ்வாறு மேலும் மூ்னறாண்டுகளுக்கு அளிக்கப்படும் குத்தகை புதிய குத்தகையாக கருதப்பட்டு புதியதாக குத்தகை நிர்ணயிக்கப்பட வேண்டும். இப்புதிய குத்தகை அப்பகுதியில் நடைமுறையில் உள்ள வாடகை மதிப்பின் அடிப்படையில் (Market Rental Value) நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நிர்ணயம் செய்ய, அப்பகுதியில் நகராட்சியில் கடந்த ஓராண்டில் ஏலத்தில் விடப்பட்ட கடைகளின் வாடகைத்தொகை தனியார் கடைகளின் வாடகை அளவு அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் தனியாரின் கட்டிடத்திற்கு அலுவலக வசதிக்கோ அல்லது பிற இனத்திற்கோ செலுத்தும் வாடகை அளவு போன்றவை, அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும், இது போன்று கணக்கிடப்பட்ட வாடகை மதிப்பின் அடிப்படையில் ஒரு சதுரடிக்கான வாடகை நிர்ணயிக்கப்பட்டு. அதன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் கடைக்கான புதிய குத்தகைத் தொகை சென்ற ஆண்டு வாடகைத்தொகையை விட குறைந்தது 15% கூடுதலாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில், கடந்த ஓராண்டில் மாநகராட்சிக்குச் சொந்தமான கடைகள் புதிதாக ஏலம் ஏதும் விடப்படவில்லை. மேலும் இப்பகுதியில் அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகங்கள் ஏதும் இல்லை. உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாக கடைகளில் அதிகபட்சமாக கடை எண்.7க்கு ரூ.1,056/-எனவும் குறைந்தபட்சமாக கடை எண்.1க்கு ரூ.608/-எனவும் மாதாந்திர உரிமக்கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தனியார் கடைகளுக்கு அதிகபட்சமாக சதுரடி ஒன்றுக்கு ரூ. 6/- வீதம் மாத வாடகை வசூல் செய்யப்படுவதாக வெளியிடப்பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம்
(30 வருடம் பழமை வாய்ந்த 260 சதுரடி அளவுள்ள ஆர்.சி.சி.கட்டிடத்தின் வயது)

| வ.எண் | தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் மாதாந்திர உரிமக்கட்டணம ரூ | 15% உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் மாதாந்திர உரிமக்கட்டணம் ரூ | சந்தை மதிப்பு அடிப்படையில் உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் உரிமக்கட்டணம் ரூ |
|---|---|---|---|
| 1 | 1020/- | 1173/- | 1560/- |

எனவே அரசாணையின்படி, மேற்படி கடைக்கு சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் உரிமக்கட்டணத்தொகை, தற்போதுள்ள உரிமக்கட்டணத்தில் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் உரிமக்கட்டணத்தைத்தொகையை விட கூடுதலாக உள்ளதனால் மேற்படி கடை எண்.5க்கு அரசாணையின்படி, சந்தை மதிப்பு அடிப்படையில் மாதாந்திர உரிமக்கட்டணம் ரூ. 1560/- என உயர்வு செய்து கடையின் உரிமக்காலத்தை 1.4.2007 முதல் 31.3.2010 வரையிலான மூன்றாண்டுகளுக்கு உரிமக்காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. அவசர அவசியத்தைக்கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு–அனுமதிக்கலாம் (எண்.14058/2006/கி.அ7)**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 301 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண்:5** குத்தகை இனங்கள் கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் 2007-2008ம் ஆண்டிற்கு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது உயர்ந்த கேள்விகளை உறுதி செய்தல் - மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் சார்பு

-----------

வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 27.2.2007 மற்றும் 16.3.2007ம் தேதிகளில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கேட்டவர்களுக்கு குத்தகை உறுதிபடுத்திட மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | தற்போதைய ஏலக்கேள்வி தொகை | தற்போதைய ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை | 2006-2007ம் ஆண்டு ஏலத் தொகை | 3 ஆண்டு சராசரி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | நவீன கழிப்பிடம் கணபதி, கட்டணம் வசூலிக்கும் உரிமை 1.4.07 முதல் 31.3.08 முடிய | 1.பூங்கோதை மனோ மகளிர் சுய உதவிக்குழு இரத்தினபுரி. கோவை<br>2. ஆர்.தனலட்சுமி | – | ரூ.3,80,125 | ரூ.3,53,000 | ரூ.2,86,939 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஸ்வயம் சித்தா சங்கமம் மகளிர் சுய உதவி குழு, செல்வபுரம், கோவை | | ரூ,4,23,765 | | |
| 2 | நவீன கழிப்பிடம் சத்தி ரோடு, கட்டணம் வசூலிக்கும் உரிமை 1.4.07 முதல் 31.3.08 முடிய | 1.எம்.கண்ணம்மா சுவர்ணா மகளிர் சுய உதவிகுழு, ராம்நகர் கோவை<br>2.ஏ.கல்பனா ராணி ஸ்ரீ இருக்கன் குடி மாரியம்மன் மகளிர் சுய உதவி குழு, ம.ந.க.வீதி கோவை | - | ரூ.2,07,000<br>ரூ.1,85,000 | ரூ.2,02,100 | ரூ.1,50,600 |
| 3 | நவீன கழிப்பிடம் சீனிவாசபுரம் (காந்திபுரம) கட்டணம் வசூலிக்கும் உரிமை 1.4.07 முதல் 31.3.08 முடிய | 1.ஆர்.தனலட்சுமி ஸ்வயம் சித்தா சங்கமம் மகளிர் சுய உதவி குழு, செல்வபுரம், கோவை<br>2.எம்.தர்மவேணி ஸ்ரீ மாகாளியம்மன் மகளிர் சுய உதவிகுழு ம.ந.க.வீதி, கோவை | - | ரூ.3,48,003<br>ரூ.3,84,345 | ரூ.3,46,000 | ரூ.2,86,067 |
| 4 | சத்தி ரோடு புல் மார்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமை1.4.07 முதல் 31.3.08 முடிய | 1.எம்.ராஜன்<br>2.கே.செல்வகுமார்<br>3.எம்.கிருஷ்ண மூர்த்தி<br>4.பி.கமலாவதி<br>5.கே.ராம்குமார் | ரூ.1,33,000<br>ரூ.1,34,000<br>ரூ.1,30,000<br>ரூ.1,32,000<br>---- | ரூ.1,71,201 | ரூ.1,23,800 | ரூ.1,20,907 |
| 5 | சத்தி ரோடு ஆடு/மாடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை 1.4.07 முதல் 31.8.08 முடிய | 1.எம்.சின்னதம்பி<br>2.கே.வி. ரவிச்சந்திரன்<br>3.ஏ.சாதிக் | ரூ.3,43,000<br>ரூ.2,76,000<br>ரூ3,49,000 | | ரூ.2,00,000 | ரூ.1,51,333 |

வரிசை எண்.1ல் கண்ட கணபதி கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமையாணை இனத்திற்கு ஆர்.தனலட்சுமி (ஸ்வயம் சித்தா சங்கமம் மகளிர் சுய உதவி குழுவினர்) அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.4,23,765/- கொடுத்துள்ளார். இத்தொகை 06-07ம் ஆண்டின் ஏலத்தொகை ரூ.3,53,000/- ஐ விட அதிகமாகவும் 3 ஆண்டு சராசரித்தொகையான ரூ.2,86,939/- ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

வரிசை எண் 2ல் கண்ட சத்தி ரோடு கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமையாணை இனத்திற்கு எம்.கண்ணம்மா, (சுவர்ணா மகளிர் சுய உதவி குழுவினர்) அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.2,07,000/- க்கு கொடுத்துள்ளார். இத்தொகை 06-07ம் ஆண்டின் ஏலத்தொகை ரூ.2,02,100/- ஐ விட அதிகமாகவும் 3 ஆண்டு சராசரித்தொகையான ரூ.1,50,600/- ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

வரிசை எண் 3ல் கண்ட சீனிவாசபுரம் (காந்திபுரம்) கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமையாணை இனத்திற்கு (எம்.தர்மவேணி ஸ்ரீ மாகாளியம்மன் மகளிர் சுய உதவிகுழுவினர்) அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.3,84,345/- க்கு கொடுத்துள்ளார். இத்தொகை 06-07ம் ஆண்டின் ஏலத்தொகை ரூ.3,46,000/- ஐ விட அதிகமாகவும் 3 ஆண்டு சராசரித்தொகையான ரூ.2,86,067/- ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

வரிசை எண் 4ல் கண்ட சத்தி ரோடு புல் மார்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமையாணை இனத்திற்கு கே.ராம்குமார் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.1,71,201/- க்கு கொடுத்துள்ளார். இத்தொகை 06-07ம் ஆண்டின் ஏலத்தொகை ரூ.1,23,800/- ஐ விட அதிகமாகவும் 3 ஆண்டு சராசரித்தொகையான ரூ.1,20,907/- ஐ விட கூடுதலாகவும் உள்ளது

வரிசை எண் 5ல் கண்ட சத்தி ரோடு ஆடு/மாடு அறுவை மனையில்கட்டணம் வசூலிக்கும் உரிமையாணைக்கு ஏ.சாதிக் என்பவர் உயர்ந்தபட்சஏலக்கேள்வி ரூ.3,49,000/- க்கு

கேட்டுள்ளார். இத்தொகை 06-07ம் ஆண்டின் ஏலத்தொகை ரூ.2,00,000/- ஐ விட அதிகமாகவும் 3 ஆண்டு சராசரித்தொகையான ரூ.1,51,333/- ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

எனவே வரிசை எண் 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு உயர்ந்த பட்ச ஏலக்கேள்விகளை ஏற்று குத்தகை இனங்களை ஏலதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்ய அவசர அவசியத்தினை கருதி கணக்கு குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு—ஒப்புதல்அளிக்கலாம்** **ந.க.எண்.13233/06/அ2(வ)**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 302 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண்:6** கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - 2007-2008 ஏல இனங்கள் - ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்தல்- பற்றியது.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட ஏல இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 8.3.2007, 23.3.2007 மற்றும் 27.3.2007 ஆகிய தேதிகளில் ஏலம் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் இனம் வாரியாக மூன்று ஆண்டு சராசரி ஏலத்தொகை 2006-07ம் ஆண்டுக்கான ஏலத்தொகை, 2007-2008ம் ஆண்டுக்கு கோரியுள்ள உச்ச ஏலத்தொகை மற்றும் உச்ச கேள்விதாரர் பெயர் ஆகிய விபரங்கள் பின்வருமாறு

| வ எண் | இனம் எண் | இனம் | மூன்று ஆண்டு சராசரி ஏலத் தொகை ரூ | 2006-2007 ஏலத் தொகை ரூ | 2007-08 உச்ச கேள்வித் தொகை ரூ | 2007-08 உச்ச கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | மேட்டுப்பாளையம்ரோடு தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25,44,000 | 26,52,000 | 33,04,000 | திரு.எம்.ஏ. சபேர்அலி |
| 2 | 3 | மேட்டுப்பாளையம்ரோடு மொத்த காய்கனி மார்க்கெட்டில் கட்டணம் வசூலித்தல் மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | 57,99,666 | 83,70,999 | 75,51,000 | திரு.எ .சாகுல் அமீது |
| 3 | 4 | ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகிலுள்ள வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 1,17,000 | 1,25,000 | 1,39,000 | திரு.எம். உதயகுமார் |
| 4 | 5 | பன்னீர் செல்வம் பூமார்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 4,76,500 | 4,86,000 | 6,01,000 | திரு.ஒ.எ. செய்யது இபுறாகிம் |
| 5 | 6 | மேட்டுப்பாளையம்ரோடு மொத்த காய்கனி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 1,82,600 | 1,94,000 | 2,35,000 | திரு.கே.எம் முருகன் |
| 6 | 7 | மேட்டுப்பாளையம்ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 3,54,667 | 2,52,000 | 2,85,000 | திரு.வி.கே. ரஹ்மத்துல் லா |
| 7 | 8 | தடாகம் ரோடு நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 2,50,833 | 2,65,000 | 3,27,770 | திரு.வி. சுப்ரமணி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | காந்திபார்க் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 1,22,333 | 1,35,000 | 2,02,200 | திரு.கே. ராஜு |
| 9 | 10 | காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 1,43,518 | 1,55,000 | 2,52,000 | திரு.க. பிரபாகர் |
| 10 | 11 | மேட்டுப்பாளையம்ரோடு எடை மேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 1,31,233 | 1,60,200 | 1,70,000 | திரு.ஆர். சுப்பரமணி ஆர்.எஸ்.எம் |

மேலே குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களில் இனம் எண்.3 மற்றும் 7 நீங்கலாக ஏனைய இனங்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளின் குத்தகை சராசரி தொகைகள் மற்றும் 2006-07 ஆண்டுக்கான குத்தகை தொகைகளை காட்டிலும் 2007-2008ம் ஆண்டு ஏலத்தில் கேட்டுள்ள உச்சகேள்வித்தொகைகள் கூடுதலாக உள்ளது.

இனம் எண்.3க்கு கடந்த மூன்று ஆண்டுகள் சராசரி தொகையைக்காட்டிலும் 2007-2008 ஆண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக உள்ளது. கடந்த 2006-2007ம் ஆண்டு உச்ச கேள்வித்தொகையைக்காடடிலும் குறைவாக உள்ளது. இந்த இனத்திற்கு 26.2.2007,8.3.2007,23.3.2007 மற்றும் 27.3.2007 ஆகிய தேதிகளில் ஏலம் கோரப்பட்டுள்ளது. எனினும், மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளித்தொகை உயர்ந்தபட்ச தொகையாக உள்ளது. எனவே உச்சக்கேள்விதாரர்க்கு ஒப்படை செய்ய மாமன்றத்தின் முடிவிற்கு.

இனம் எண்.7க்கு கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி தொகையைக்காட்டிலும் 2007-2008 ஆண்டிற்கு கேள்வித்தொகை குறைவாக உள்ளது. கடந்த 2006-2007ம் ஆண்டு உச்ச கேள்வித்தொகையைக்காடடிலும் கூடுதலாக உள்ளது. 2006-2007ம் ஆண்டில் உச்ச கேள்வித்தொகை குறைவாக இருந்தால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு 2007-2008ம் ஆண்டுக்கான உயர்ந்தபட்ச தொகை கோரியுள்ள உச்ச கேள்விதாரருக்கு ஒப்படை செய்ய மாமன்றத்தின் முடிவிற்கு.

இந்த உச்ச ஏலத்தொகைகளை முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது. அவசர அவசியத்தை முன்னிட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு** - உச்ச ஏல கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யலாம்

**ந.க.எண்.177/2007/அ1(மே)**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 303 நாள்.30.03.2007**

**உச்ச ஏல கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

**பொருள் எண்:7**

மாமன்றத் தீர்மான எண்.280 நாள் 02.02.2007ல் அனுமதி அளித்துள்ளபடி கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட 1 முதல் 56 வரையிலான குத்தகை இனங்களுக்கு 2007-2008ம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.02.2007, 23.02.2007,7.03.2007மற்றும் 13.03.2007 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. இதில் கழிவு நீர் பண்ணையில் 01.04.2007 முதல் 31.03.2010 வரையிலான மூன்றாண்டுகளுக்கு புல் அறுத்துக்கொள்ளும் இனங்களுக்கு கீழ் கண்டுள்ளவாறு உச்சக்கேள்வித்தொகை கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் எண் | பிளாக் எண் | | பெயர் | சென்ற ஆண்டு தொகை | இந்த ஆண்டு தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 39 | பிளாக் எண்.1 | 2 ஏக்கர் | கே.நசீர் | 65,000/- | 1,30,000/- |
| 2 | 40 | பிளாக் எண்.2 | 2 ஏக்கர் | வள்ளியம்மாள் | 65,000/- | 2,01,000/- |
| 3 | 41 | பிளாக் எண்.3 | 2 ஏக்கர் | பி.ஏ.சுலைமான் | 65,000/- | 2,25,000/- |
| 4 | 42 | பிளாக் எண்.4 | 2 ஏக்கர் | செல்வம் | 67,000/- | 2,01,000/- |
| 5 | 43 | பிளாக் எண்.5 | 2 ஏக்கர் | குழந்தை கவுண்டர் | 66,000/- | 2,25,000/- |
| 6 | 44 | பிளாக் எண்.6 | 2 ஏக்கர் | குழந்தை கவுண்டர் | 68,000/- | 2,29,000/- |
| 7 | 45 | பிளாக் எண்.7 | 2 ஏக்கர் | பி.ஏ.சுலைமான் | 71,000/- | 2,00,000/- |
| 8 | 46 | பிளாக் எண்.8 | 2 ஏக்கர் | பி.ராமசாமி | 71,000/- | 2,60,000/- |
| 9 | 47 | பிளாக் எண்.9&10 | 4 ஏக்கர் | வள்ளியம்மாள் | 1,40,000/- | 5,10,000/- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | 48 | பிளாக் எண்.11&12 | 4 ஏக்கர் | அவினாசியப்பன் | 1,40,000/- | 4,96,000/- |
| 11 | 49 | பிளாக் எண்.13&14 | 4 ஏக்கர் | வெங்கடாசலம் | 1,40,000/- | 6,01,000/- |
| 12 | 50 | பிளாக் எண்.15&16 | 4 ஏக்கர் | ஜி.ராம்மோகன் | 1,45,000/- | 5,75,000/- |
| 13 | 51 | பிளாக் எண்.17&18 | 4 ஏக்கர் | ஆர்.ராமசாமி | 1,45,000/- | 6,30,000/- |
| 14 | 52 | பிளாக் எண்.19&20 | 4 ஏக்கர் | கே.குருசாமி | 1,50,000/- | 6,43,000/- |
| 15 | 53 | பிளாக் எண்.21&22 | 4 ஏக்கர் | சின்னத்தம்பி | 1,60,000/- | 7,11,000/- |
| 16 | 54 | பிளாக் எண்.49 | 2 ஏக்கர் | பி.ஏ.சுலைமான் | 75,000/- | 2,10,000/- |
| 17 | 55 | பிளாக் எண்.50&52 | 4 ஏக்கர் | ஏலம் கோரப்படவில்லை | | |
| 18 | 56 | பிளாக் எண்.52 | 2 ஏக்கர் | பி.ஏ.சுலைமான் | 45,000/- | 90,000/- |

மேற்படி கழிவு நீர் பண்ணையில் ஜவஹர்லால் நேரு நகர புணரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. அதில் இவ்விடத்தில் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைககப்படவுள்ளதாலும், இப்பணிகள் மூன்று மாதங்களில் துவங்கப்படவுள்ளதாலும் கழிவுநீர்ப்பண்ணையில் புல் அறுத்துக்கொள்ளும் உரிமத்திற்கு ஏலம் கோரியவர்கள் மாநகராட்சி வசம் கொடுத்த வைப்புதொகையினை உடனே திரும்பப்பெற்றுக்கொண்டுள்ளனர். இந்நிலையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தங்கள் மனுவில் மாநகராட்சிக்கு இடம் தேவைப்படும் வரையில் புல் அறுத்துக்கொள்ளும் உரிமத்தினை வழங்குமாறு கோரியுள்ளனர். ஆகவே ஏற்கனவே கேட்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகைக்கு அவர்களுக்கு முதலில் மூன்று மாதங்களுக்கு மாத அடிப்படையில் தொகை வசூல் செய்து கொண்டு அனுமதி வழங்கலாம். ஒரு மாதத்தொகையினை முன்பணமாக பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட இடம் மாநகராட்சிக்கு தேவைப்படும் பொழுது கட்டணம் வசூல் செய்யாமல் இடத்தினை மாநகராட்சி பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளலாம். இந்நிபந்தனையை ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் மறு ஏலம் கோரவும், அல்லது மேற்படி இனங்களை ஏலப்பட்டியலிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதல் பெற மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அவசர அவசியத்தைக்கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் கணக்குக்குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.12467/06/அ10**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 304 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

## பொருள் எண்:8

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென பில்லூர் குடிநீர் இரண்டாவது திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு மையத்தின் கீழ் செயல்படுத்துவதற்கான கடனுதவி வழங்குவது பற்றி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தமது கடித எண் TUFIDCO/JNNURM/AM (M)/2007, 23.03.2007ம் தேதியில் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.11374.30 இலட்சத்தில் ரூ.7962.01 இலட்சம் கடனுதவி மற்றும் மானியம் கோவை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதனை கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு மையத்தின் பங்கு | | திருப்பிச் செலுத்துவவதற்கான காலம் | மாநகராட்சியின் பங்கு 30 சதவீதம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | | வட்டியில்லா கடன் 20 சதவீதம் ரூ.இலட்சத்தில் | மானியம் 50 சதவீதம் ரூ. இலட்சத்தில் | | |
| 1 | பில்லூர் Iiவது குடிநீர்த் திட்டம் | 11374..30 | 2274.86 | 5687.15 | 7 வருடம் | 3412.29 |

கோவை மாநகராட்சிக்கு ரூ.2274.86 இலட்சம் (வட்டியில்லா) கடனுதவியும் மற்றும் மானியம் ரூ.5687.15 இலட்சம் ஆக மொத்தம் ரூ.7962.01 இலட்சங்களை தமிழ்நாடு நகா்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் வழங்க, மாநகராட்சியின் ஒப்புதல் அந்நிறுவனத்தால் கோரப்பட்டுள்ளதால் இது குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.9190/02/ப.வ.(எம்)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 305 நாள்.30.03.2007</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது. மேலும் மாநில அரசின் பங்களிப்பான 20 சதவீத வட்டியில்லா கடன் ரூ.2274.86 லட்சத்தினை முழு மானியமாக வழங்க மாநில அரசைக் கேட்டுக் கொள்ளலாம் என தீா்மானிக்கப்பட்டது**

---

**<u>பொருள் எண்:9</u>**

பொருள் : கோவை மாநகராட்சி – பில்லூா் குடிநீா்த் திட்டம் II மற்றும் விநியோகக்குழாய் புனரமைப்பு செய்தல் - தமிழ்நாடு வடிகால் வாரியம் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி – மன்ற ஒப்புதல் வேண்டியது – பற்றியது.

மாநகராட்சிக்கென பிரத்தியோக பில்லூா் திட்டம் பில்லூா் அணையினை நீராதாரமாக கொண்டு தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு ரூ.113.743 கோடிக்கு ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு த்திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் மாநகராட்சிக்கு கூடுதலாக நாளொன்றுக்கு 65 மில்லியன் லிட்டா் நீா் கிடைக்கும். தற்போது பயனில் உள்ள சிறுவாணி குடிநீா் விநியோக திட்டமானது மிகவும் பழமையானது, மற்றும் பெருகி வரும் புதிய மனைப்புரிவுகளுக்கு மெயின் குழாய் விஸ்தரிப்பு செய்ய ஏற்கனவே உள்ள மெயின் குழாயில் போதுமான அழுத்தம் இல்லை. மேலும் பில்லூா் திட்ட மெயின் குழாய்களின் முறையான வடிவமைப்பு இல்லாமையால் பீளமேடு மற்றும் சிங்காநல்லூா் பகுதிகளில் சீரான விநியோகம் செய்ய முடிவதில்லை.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் கூடுதல் நீா் பெறப்பட்டாலும் விநியோகக்குழாய் திட்டத்தின் புனரமைப்பு செய்யாத நிலையில் நகரின் அனைத்து பகுதியிலூீம் சீரான விநியோகம் செய்ய இயலாது.

மத்திய அரசு இரண்டாம் பில்லூா் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் தருணத்தில் 24 மணி நேரமும் 7 நாட்களுக்கும் குடிநீா் வழங்க ஏதுவான வகையில் விநியோகத் திட்டத்தினை புனரமைப்புச் செய்யவும் தேவையான பகுதிகளில் புதிய நீா்த் தேக்க தோட்டிகளுடன் விரிவான திட்ட அறிக்கையினை தனியே தயாரித்து ஒப்புதலுக்கு சமா்ப்பிக்க வலியுறுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி பற்றி தமிழ்நாடு குடிநீா் வாரிய பொறியாளா்களுடன் கலந்து பேசப்பட்டது. வாரியத்தின் நிா்வாகப்பொறியாளா்தனது கடித எண்.400/JDO/2007 நாள் 20.03.2007-ல் பில்லூா் இரண்டாம் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து சமா்ப்பித்ததற்கு ஆய்வுக்கட்டணம் (investigation) செலுத்தவும் மேலும் விநியோகத் திட்டம் புனரமைப்புச் செய்ய தயாரிக்க வேண்டிய திட்ட அறிக்கைக்கு ஆய்வு கட்டணம் செலுத்தவும் விநியோக திட்டம் முழுவதும் வாா்பு இரும்பு (DI pipes) குழாய் பயன்படுத்தவும். மேற்கண்ட திட்டங்களை தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியம் மூலமாகவே செயலாக்கம் செய்யவும் உரிய மன்றத் தீா்மானம் பெற்று சமா்ப்பித்தப்பின்பு மேல் நடவடிக்கை தொடரவுள்ளதாக தெரிவித்துள்ளாா்.

எனவே இது குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு - மன்றத்தின் முடிவிற்கு** **ந.க.எண்.977/07/ப.வ.(எம்)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண். 306 நாள்.30.03.2007</u>**

**பில்லூா் இரண்டாம் குடிநீா திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து சமா்ப்பித்ததற்கான ஆய்வுக் கட்டணம் செலுத்த தீா்மானிக்கப்பட்டது. விநியோகத்திட்டம் புனரமைப்பு செய்ய தயாரிக்க வேண்டிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஆலோசகா்களை நியமிக்கவும், திட்டத்தினை செயல்படுத்த தேசிய அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரவும் தீா்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்:10**

ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் மற்றும் டிராவல்ஸ் உரிமையாளர்கள் 19.07.06 அன்று மாநகராட்சி கூட்ட அரங்கில் மேயர் தலைமையில் ஆணையர் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில், தற்போது கட்டப்பட்டு வரும் 15 பதிவு அறைகள் நடத்த ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் மற்றும் டிராவல்ஸ் உரிமையாளர்கள் மட்டும் கலந்து கொள்ளும் விதத்தில் ஏலம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் 9.11.06ல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர செய்தி தாளில் விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் எவரும் வைப்புததொகை, காப்புத்தொகை சால்வன்சி செலுத்தி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. எனவே 22.11.06ம் தேதி அன்று மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்கள் உச்ச ஏலத்தொகை குறைவாக கேட்கப்பட்டதால் மூன்றாம் முறையாக 07.02.07ம் தேதியன்று மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்கள் கேட்ட உச்ச ஏலத்தொகை / ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் 22.11.06ம் தேதி நடைபெற்ற ஏலத்தின் உச்ச ஏலத்தொகை ஆகியவை கீழ் வருமாறு.

| வ. எண் | அறை எண் | அறையின் அளவு | 07.02.07ம் தேதிய ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் | 22.11.06ம் தேதிய ஏலத்தில் உச்ச ஏலத்தொகை | 07.02.07ம் தேதியில் நடைபெற்ற உச்ச ஏலத தொகை | ஒப்பந்தப் புள்ளி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | A1 | 10’x10’ | மனோஜ் செரியன் ஆசியன் டிராவல்ஸ் | 2500 | 2700 | 1800 | |
| 2 | A1 | 10’x10’ | டி.சுலோச்சனா மயூரா டிராவல்ஸ் | --- | 2600 | 1600 | |
| 3 | A2 | 10’x10’ | டி.எஸ்.பழனிசாமி ஆர்த்தி டிராவல்ஸ் | 2500 | 2700 | 1900 | |
| 4 | A2 | 10’x10’ | ஆர்.வெங்கடேசன் ஆர்.வி.ஆர். டிராவல்ஸ் | --- | 2600 | 1700 | |
| 5 | A3 | 10’x10’ | எ.சின்னசாமி | --- | 2800 | ---- | |
| 6 | A3 | 10’x10’ | எஸ்.கனகராஜ் கவி டிராவல்ஸ் | 2600 | 2700 | 1700 | |
| 7 | A4 | 10’x10’ | அப்சல் பர்வின் டிராவல்ஸ் | --- | 3200 | 2400 | |
| 8 | A4 | 10’x10’ | ஜெ.சுப்புலட்சுமி தசரதன் டிராவல்ஸ் | 2700 | 3100 | 2000 | |
| 9 | A5 | 10’x10’ | ஆர்.வெங்கடேசன் ஆர்.வி.ஆர். டிராவல்ஸ் | --- | 3400 | 2350 | |
| 10 | A5 | 10’x10’ | மொகமது மொய்தீன் எச்.எம்.டிராவல்ஸ் | 2700 | 3300 | 2000 | |
| 11 | A6 | 10’x10’ | ஆர்.வெங்கடேஷ்வரன் எ.வி.எம்.டிராவல்ஸ் | 2800 | 3900 | 2300 | |
| 12 | A6 | 10’x10’ | டி.எஸ்.பழனிசாமி ஆர்த்தி டிராவல்ஸ் | --- | 3800 | 2100 | |
| 13 | A8 | 10’x10’ | முகமது மைதீன் எச்.எம்.டிராவல்ஸ் | 2900 | 4000 | 2400 | |
| 14 | A8 | 10’x10’ | மனோஜ் செரியன் ஆசியன் டிராவல்ஸ் | ---- | 3900 | 2000 | |
| 15 | A9 | 10’x10’ | எஸ்.ரமேஸ் குமார் குரு டிராவல்ஸ் | ---- | 4200 | 2000 | |
| 16 | A9 | 10’x10’ | என்.கிருஷ்ணமூர்த்தி சவுந்தர்யா டிராவல்ஸ் | 2900 | 4100 | 1750 | |
| 17 | A10 | 10’x10’ | டி.சுப்புலட்சுமி தசரதன் டிராவல்ஸ் | 2900 | 4100 | 1900 | |
| 18 | A10 | 10’x10’ | ஜெ.ஜெ.டிராவல்ஸ் | ---- | 4000 | 1780 | |
| 19 | A11 | 10’x10’ | எம்.ஸ்டிபன் ஆஷா டிராவல்ஸ் | ---- | 4100 | 2050 | |
| 20 | A11 | 10’x10’ | மனோஜ் செரியன் ஆசியன் டிராவல்ஸ் | 3100 | 4000 | 1800 | |
| 21 | A12 | 10’x10’ | என்.பி.பிரபுராஜ் சுபா டிராவல்ஸ் | 3100 | 4100 | 2100 | |
| 22 | A12 | 10’x10’ | ஆர்.வெங்கடேஷ்வரன் எ.வி.எம்.டிராவல்ஸ் | ---- | 4000 | 1850 | |
| 23 | A13 | 10’x10’ | டி.சுலோச்சனா மயூரா டிராவல்ஸ் | 3200 | 4100 | 2350 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | A13 | 10'x10' | எம்.ஸ்டிபன்<br>ஆஷா டிராவல்ஸ் | ---- | 4000 | 2000 | |
| 25 | A14 | 10'x10' | என்.கிருஷ்ணமூர்த்தி<br>சவுந்தர்யா டிராவல்ஸ் | 3300 | 4100 | 2400 | |
| 26 | A14 | 10'x10' | என்.பி.பிரபுராஜ்<br>சுபா டிராவல்ஸ் | ---- | 4000 | 2200 | |
| 27 | A15 | 10'x10' | எஸ்.ரமேஸ் குமார்<br>குரு டிராவல்ஸ் | 3400 | 4000 | 2050 | |
| 28 | A15 | 10'x10' | ஜெ.ஜெ.டிராவல்ஸ் | ---- | 4100 | 2400 | |

கடை எண் எ1 க்கு உச்ச ஏலத்தொகை ரூ.2,700/- கேட்டுள்ள திரு. மனோஜ் செரியன் ஆசியன் டிராவல்ஸ் அவர்கட்கும், கடை எண் எ2க்கு உச்ச ஏலத்தொகை ரூ.2,700/- கேட்டுள்ள திரு.டி.எஸ்.பழனிசாமி ஆர்த்தி டிராவல்ஸ் அவர்கட்கும், எ3 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.2,800/- கேட்டுள்ள திரு.எ.சின்னசாமி அவர்கட்கும், எ4 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.3,200/- கோரிய திரு. அப்சல் பர்வின் டிராவல்ஸ் அவர்கட்கும், கடை எண் எ5க்கு உச்ச ஏலத்தொகை ரூ.3,400/- க்கு ஏலம் கோரிய ஆர்.வெங்கடேசன் ஆர்.வி.ஆர். டிராவல்ஸ் அவர்கட்கும் எ6 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.3,900/- க்கு ஏலம் கோரிய திரு.ஆர்.வெங்கடேஷ்வரன் எ.வி.எம்.டிராவல்ஸ் அவர்கட்கும், கடை எண் எ8 க்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,000/- க்கு ஏலம் கோரிய திரு. முகமது மைதீன் எச்.எம்.டிராவல்ஸ் அவர்கட்கும், எ9 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,200/- க்கு ஏலம் கோரிய திரு. எஸ்.ரமேஸ் குமார் குரு டிராவல்ஸ் அவர்கட்கும், எ10 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,100/- க்கு ஏலம் கோரிய திருமதி. டி.சுப்புலட்சுமி அவர்கட்கும், எ11 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,100/- க்கு ஏலம் கோரிய திரு. எம்.ஸ்டிபன் ஆஷா டிராவல்ஸ் அவர்கட்கும், எ12 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,100/- க்கு ஏலம் கோரிய திரு. என்.பி.பிரபுராஜ் சுபா டிராவல்ஸ் அவர்கட்கும், எ13 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,100/- க்கு ஏலம் கோரிய திருமதி. டீ.சுலோச்சனா மயூரா டிராவல்ஸ் அவர்கட்கும்,

எ14 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,100/- க்கு ஏலம் கோரிய திரு. என்.கிருஷ்ணமூர்த்தி சவுந்தர்யா டிராவல்ஸ் அவர்கட்கும், எ15 கடைக்கு உச்ச ஏலத்தொகை ரூ.4,100/- க்கு ஏலம் கோரிய திரு. ஜெ.ஜெ.டிராவல்ஸ் பதிவு அறை ஒதுக்கீடு செய்யவும்.

மேலும், 10'x10' அளவுள்ள எ7 பதிவு அறைக்கு திரு.கனகராஜ், கவி டிராவல்ஸ், மற்றும் திரு.எ.அப்சல் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் ஏலத்தில் இருவரும் ஏலம் கோரவில்லை. ஆனால் ஒப்பந்தப்புள்ளி முறையே ரூ.2100/-க்கும் ரூ.2000/-க்கும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். திரு.எஸ்.கனகராஜ் தனது 7.02.07ம் தேதிய கடிதத்தில் அறை எண்-8க்கு ரூ.4,100/- க்கு உச்ச ஏலத்தொகைக்கு ஏலம் போய் உள்ளதால் அறை எண்-7க்கு ரூ.4,100/- க்கு தான் எடுத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார். இதன் பேரில் முடிவு எடுக்கவும்.

மேலும், ஏற்கனவே கட்டப்பட்டு பலமுறை ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் போகாத 16'x10' அளவுள்ள பதிவு அறை எண் 11க்கு திரு.சிவராஜ், எஸ்.ஆர்.டிராவல்ஸ் மற்றுமு திரு.சக்திவேல் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர்.இதில் திரு.சிவராஜ் எஸ்.ஆர்.டிராவல்ஸ் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.11,100/- கரும்் திரு.சக்திவேல் ரூ.7500/-க்கும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். எனவே, உச்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சிவராஜ், எஸ்.ஆர்.டிராவல்ஸ் அவர்கட்கு அறை எண்-11ஐ ரூ.11,100/- க்கு அறை ஒதுக்கீடு செய்யவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் ஒப்புதல் பெறப்பபட்டு உள்ளது. இதனை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்லாம்** **ந.க.எண்.15531/06/A4(N)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 307 நாள்.30.03.2007</u>**

**அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்:11

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க 26.3.2007 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 41105/06 எம்.டி.2 | வார்டு எண் 26ல் புலியகுளம் பிரதா சாலையில் மின் வாரியம் அலுவலகம் முதல் திருச்சி சாலை வாய்க்கா வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 21.50 | 9.03.07 | திரு.ஆர்.தங்கவேல் | 12.98% குறைவு |
| 2 | 702/07/ எம்.டி.2 | வார்டு எண் 16ல் ஹட்கோ காலனி பூங்காவிற்கு நடைபாதை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல். | 24.30 | 9.03.07 | தி/ள் எம்.எஸ்.இஞ்சினியர்ஸ் | 12.19% குறைவு |
| 3 | 703/07/ எம்.டி.2 | வார்டு எண் 16ல் ஹட்கோ காலனி பூங்காவில் மேல் நிலைத்தொட்டி கட்டுதல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்தல் | 24.80 | 9.03.07 | திருமதி.யு.மணி | 8.51% குறைவு |
| 4 | 44467/06/ எம்.டி.4 | வார்டு எண் 36-ல் சண்முகா தியேட்டர் சாலை மற்றும் அம்சா லே அவுட் சாலைக்கு தார் தளம் புதுப்பித்தல். | 16.00 | 9.03.07 | தி/ள். கே.ஜி.லட்சுமிபதி அன் கோ | 0.27% குறைவு |
| 5 | 1222298/ 06/ எம்.டி.4 | வார்டு எண் 34-ல் என்.எஸ்.ஆர்.சாலை மற்றும் பாரதி பார்க் குறுக்குச்சாலையி குடிநீர் பிரதானக்குழாய்கள் பதித்தல | 4.85 | 6.03.07 | திருமதி.உ.அலமேலு மங்கை | 4.20% அதிகம் |
| 6 | 21103/06/ எம்.டி.3 | வார்டு எண் 53-ல் வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் சமுதாயக்கூடம் கட்டுதல். | 12.50 | 27.02.07 | தி/ள் எம்.எஸ்.இஞ்சினியர்ஸ் | 4.99% அதிகம் |
| 7 | 19954/06/ எம்.டி.3 | வார்டு எண் 19-ல் பாப்பம்மாள் லே அவு பகுதியில் தார் தளம் அமைத்தல். | 6.00 | 27.02.07 | தி/ள். பி.செந்தில் அன் கோ | 4.84% அதிகம் |
| 8 | 5798/06/ எம்.டி.2 | வார்டு எண் 72-ல் ராமகிருஷ்ணாபுரம் ஆரம்ப பள்ளியில் வகுப்பறைகள் கட்டுதல் | 16.00 | 9.03.07 | தி/ள். எஸ்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.83% அதிகம் |
| 9 | 5415/05/ எம்.டி.2 | வார்டு எண் 72-ல் பிருந்தாவன் நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 6.50 | 9.03.07 | தி/ள் . குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.68% அதிகம் |
| 10 | 5414/06 /எம்.டி.2 | வார்டு எண் 72-ல் கே.பி.ஜி.நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 7.00 | 9.03.07 | தி/ள் குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.95% அதிகம் |
| 11 | 5410/06/ எம்.டி.2 | வார்டு எண் 72-ல் கணபதி மாநகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 25.00 | 9.03.07 | திரு.கே.நடராஜன் | 4.93% அதிகம் |
| 12 | 6881/05/ எம்.டி.2 | வார்டு எண் 2-ல் பீளமேடு புதூர் உயர் நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 25.00 | 9.03.07 | திரு.ஏ.விஜயகுமார் | 4.86% அதிகம் |
| 13 | 5868/06/ எம்.டி.3 | கோவை மாநகராட்சி பிரதான சாலை சந்திப்பில் உள்ள சிக்னல் மற்றும் மேம்பாலம் பகுதியில் சோலார் பிளிங்கர்ஸ் பொருத்துதல் | 4.50 | 6.03.07 | தி/ள் பாரத் எலக்ட்ரானிக்ஸ் | 4.17% அதிகம் |
| 14 | 199981/06/ எம்.டி.3 | வார்டு எண் 28 வி.என். தோட்டம் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல் மற்றும் தொட்டி கட்டுதல் | 3.89 | 6.03.07 | தி/ள் எம்.எஸ்.இஞ்சினியர்ஸ் | 4.88% அதிகம் |
| 15 | 199982/06/ எம்.டி.2 | வார்டு எண் 28 வெங்கடசாமி தோட்டம் பகுதியில் 70 வாட்ஸ் மற்றும் 250 வாட் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்த | 0.32 | 6.03.07 | தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் | 4.97% அதிகம |
| 16 | 13127/06/ எம்.டி.3 | வார்டு எண் 32-ல் ஆறுமுக்கு வீதியில் மேல் நிலை தொட்டி கட்டுதல். | 1.55 | 6.03.07 | தி/ள் எம்.எஸ்.இஞ்சினியர்ஸ் | 4.42% அதிகம |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | 133397/06/ எம்.டி.3 | வார்டு எண் 42 ஐயப்பா நகர் பகுதியி புதிய கம்பத்துடன் கூடிய 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 1.13 | 6.03.07 | தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் | 4.97% அதிகம் |
| 18 | 133394/06/ எம்.டி.3 | வார்டு எண் 43 பகுதியில் புதிய கம்பத்துடன் கூடிய 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 1.13 | 6.03.07 | தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் | 4.97% அதிகம் |
| 19 | 133396/06/ எம்.டி.3 | வார்டு எண் 41 பகுதியில் புதிய கம்பத்துடன் கூடிய 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள அமைத்தல். | 1.34 | 6.03.07 | தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் | 4.97% அதிகம் |
| 20 | 28886/06/ எம்.டி.3 | வார்டு எண் 14-ல் விநாயகர் கோவீல் வீதியில் உள்ள நூலக கட்டிடத்தின் மேல் தளத்தில் சமுதாயக் கூடம் கட்டுதல். | 4.00 | 6.03.07 | தி/ள். எஸ்.ஆர். இஞ்சினியர்ஸ் அண்டு பில்டர்ஸ் | 4.39% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.** வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 5 முதல் 20 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுதி பெற வேண்டியுள்ளதாலும் **அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.41105/06/ எம்.டி.2**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 308 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

## பொருள் எண்:12

கோயம்புத்துார் மாநகராட்சி உப்பிலிபாளயைம் கிராமம் க.ச.எண்.655, 655/ 2,657.658 நஞ்சுணடாபுரம் சாலையில் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள கழிவு நீர் உந்து நிலையம் (pumping station) அமைந்துள்ளது. மேற்படி கழவு நீர் உந்து நிலையம் விரிவுபடுத்த இதன் கிழபுறம் எல்லையை ஒட்டி உப்பிலிபாளையம் கிராமத்தில் உள்ள

| சாலை எண் | ஏக்கா – சென்ட் |
|---|---|
| 659 (புற) வாய்க்கால் | 0.18 |
| 660 பட்டாநிலம் | 1.51 |
| 661/ 1 பட்டநிலம் | 1.31 |
| 661/ 2 பட்டநிலம | 1.17 |
| 662 பட்டநிலம | 1.90 |
| 663 பட்டாநிலம் | 2.22 |
| | ----------- |
| மொத்தம் | 8.29 பரப்பு |
| | ----------- |

மேற்படி இடத்தில் க.ச.எண் (659) (புற) வாய்க்கால் பரப்பு 0.18 ஏக்கர் நிலத்தை வருவாய்துறையிடமிருந்து நில உரிமை மாற்றம்செய்யவும். சாலை எண்கள் 660, 661/ 1 , 661/ 2 662 மற்றும் 663-ல் உள்ள 8.11 ஏக்கர் நிலத்தை மாநகராட்சி கழவு நீர் உந்து நிலையம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யலாம். மேற்படி கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. எனவே மேற்படி நிலங்களை கட்டாய நில ஆர்ஜிதம் மூலமாகவோ அல்லது தனியார் பேச்சுவார்த்தை மூலமாகவோ கட்டாய நில ஆர்ஜிதம் செய்ய மாநகர மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு. அனுமதிக்கலாம்** **(எண்.12069/06/ எம்.டி.மேன்) எச்.1(வ)**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 309 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. கழிவு நீர் உந்து நிலையம் விரிவுபடுத்த பொருளில் கூறப்பட்டுள்ள 0.18 ஏக்கர் நிலத்தை வருவாய்த் துறையிடமிருந்து நில உரிமை மாற்றம் செய்யவும், 8.11 ஏக்கர் நிலத்தை நில கையகப்படுத்துதல் சட்டம் 1984, பிரிவு 17 (1) ன்படி அவசர நில ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முன் மொழிவு அனுப்பவும், நில ஆர்ஜிதம் செய்வதற்கு உண்டான தொகையினை மாமன்றம் ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்13**

கோயம்புத்தூர் மாநகராட்சி சிங்காநல்லூர் கிராமம் க.ச.எண். 541/1, பாகம். 541/2,541/3, 541/4, 542, 543, 544/10, பாகம் 544/11, 545,546-ல் பட்டணம் இட்டேரி ரோட்டில் இரயில்வே லைனுக்கு தென்புறமும். பட்டணம் ரோட்டிற்கு மேல்புறமும் அமைந்துள்ள சாலைகளில்15.12 ஏக்கர் நிலம்மாநகராட்சி உந்து நிலையம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்வது தொடர்பாக கீழ்காணும் சாலைகளில்

| சாலை எண் | ஏக்கா – சென்ட் |
|---|---|
| 541/1 பாகம் | 0.58 பட்டா |
| 541/2 | 0.31 இட்டேரி |
| 541/3 | 0.82 பட்டா |
| 541/4 | 0.78 பட்டா |
| 542 | 2.75 பட்டா |
| 543 | 0.57 பட்டா |
| 544/10 பாகம் | 0.13 பட்டா |
| 544/11 | 1.92 பட்டா |
| 545 | 4.89 பட்டா |
| 546 | 1.37 பட்டா |
| | 15.12ஏக்கர் |

உள்ளது.

மேற்படி இடத்தில் க.ச.எண்.541/12 இட்டேரி புறம்போக்குஇடம் 0.31 ஏக்கர் நிலத்தை வருவாய் துறையிடமிருந்து நில உரிமை மாற்றம் செய்யவும், சாலை எண்கள் 541/1 பாகம், 541/3, 541/4, 542, 543 544/10 பாகம், 544/ 11, 545, 546-ல் உள்ள 14.81 ஏக்கர் நிலத்தை மாநகராட்சி கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யலாம்.

மேற்படி நிலம் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. எனவே இந்நிலங்களை கட்டாய நில ஆர்ஜிதம் மூலமாகவோ அல்லது தனியார் பேச்சுவார்த்தை மூலமாகவோ கட்டாய நில ஆர்ஜிதம் செய்ய மாநகர மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு. அனுமதிக்கலாம்** **(எ.ண்.12069/06/ எம்.டி.மேன்) கி.எச்.**1

**மாநகர மன்ற தீர்மானம் எண். 310 நாள்.30.03.2007**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க பொருளில் கூறப்பட்டுள்ள 0.31 ஏக்கர் நிலத்தை வருவாய்த் துறையிடமிருந்து நில உரிமை மாற்றம் செய்யவும், 14.81 ஏக்கர் நிலத்தை நில கையகப்படுத்துதல் சட்டம் 1984, பிரிவு 17 (1) ன்படி அவசர நில ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முன் மொழிவு அனுப்பவும், நில ஆர்ஜிதம் செய்வதற்கு உண்டான தொகையினை மாமன்றம் ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**